1974 மார்ச் 16]

Half a Million Jobs Programmes.

* 463 *Q.*—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether the Central Team which is entrusted with evolving jobs schemes in the State has invited this Government during 1973 regarding on the spot clearance to all viable employment schemes and to suggest modifications ; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) : ஆம். 1973 ஜனவரித் திங்களில் மத்திய அரசு ஐந்து லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் திட்டத்தை அறிவித்து, மாநில அரசுகளை வேலைவாய்ப்புக்கான திட்டங்களை உருவாக்கி அனுப்பக் கோரியது. அதன்படி, இந்த அரசு 25 திட்டங்களைத் தீட்டி மத்திய அரசின் ஏற்புக்கு அனுப்பியது. 7—3—1973 அன்று தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறையின் செயலாளர், புதுடில்லி சென்று மத்திய திட்டக்குழு அலுவலர்களோடு இத்திட்டங்கள்பற்றி விவாதித்தனர். பின்னர் 7—4—1973 அன்று மத்திய திட்ட அமைச்சர் திரு. மோகன் தாரியா சென்னை வந்து, முதல்வருடனும் இத்திட்டங்கள் பற்றிக் கலந்துரையாடினார். மீண்டும் 12—6—1973 அன்று திட்டக் குழுவின் இணைச் செயலாளர் சென்னை வந்து மாநில அலுவலர்களுடன் விவாதித்தார்.

இவ்விவாதங்களில் முடிவு செய்தபடி, சில திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டன. மேலும் சில திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இவையெல்லாம் திட்டக் குழுவுக்கு ஏற்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இதுவரை மத்திய திட்டக்குழு, இந்த அரசு அனுப்பிய 48 திட்டங்களில் 6·65 கோடி ரூபாய் மதிப்பீடு உள்ள, 42 திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

* 464 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தினைப் போக்கிட ரூ. 10 கோடியில், அரசு, திட்டம் ஏதேனும் வகுத்துள்ளதா ?.

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : (அ) & (இ) ஐந்து லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் இந்த அரசு 1973–74-ம் ஆண்டில் ரூ. 6·65 கோடி ரூபாய் செலவில் 10,200 ஆசிரியர்கள் நியமனம், ஐந்து போக்குவரத்துக் கழகங்களின் கீழ் தனிப் பொறியியல் இணையங்கள் தொடங்குதல், மீன்வளப் பெருக்கத்திற்கான திட்டங்கள், 300 விவசாயப் பணி நிலையங்கள் அமைத்தல், 13 கூட்டுறவு மருத்துவமனைகள்